பக்கங்கள்:-19

காலை முரசு

## ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி அநுர உரை



ஐக்கியநாடுகள்பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்ற வுள்ளார் என்று 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 27 | செவ்வாய்க்கிழமை | 12.08.2025 | அதிர்வு 11



# மன்னாரில் நள்ளிரவில் பதற்ற நிலை








## காற்றாலை உபகரண வாகனத்தை வழிமறித்து மக்கள் ஆவேசப் போர்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரத்தின் பாரிய உதிரிப் பாகங்களை ஏற்றி வந்த வாகனத்தை நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் மன்னார் தீவுப் பகுதிக்குள் நுழைய விடாமல் மக்கள் வழிமறித்துப் போராட்டம் நடத்தியமையை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது. பொலிஸார் குவிக்கப்பட்டு இருக்கின்றனர். 06

# ஹர்த்தால் தினத்தன்று பக்தர்கள் கோயில்களுக்கு செல்வதற்கான போக்குவரத்துச் சேவைகளை நடத்துக!

## சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் சுமந்திரன் கோரிக்கை

“தமிழர் தாயகத்தில் இன்று வரைத் தொடரும் இராணுவத்தின் மிருகத்தனத்தை எதிர்த்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் போது, மக்களுக்கான அவசர சேவைகளைப் பேணுவதைப் போல், பக்தர்கள் கோயில்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து சேவைகளையும் பேணுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோருகின்றோம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு முழுவதும 06






மன்னாரில் காற்றாலை மின் கோபுரத்தின் பாரிய உதிரிப் பாகங்களை ஏற்றி வந்த வாகனத்தை மக்கள் போராட்டக் குழுவினர் வழிமறித்துத் தடுத்து, முடக்கி உள்ளமையை அடுத்து அங்கு பதற்றம் நிலவுகிறது.

இதுவரை நாள்களும் மக்களின் ஆட்சேபனைகள், எதிர்ப்புகளைப் புறம்தள்ளி, இந்தப் பாரிய உதிரிப் பாகங்களைக் கொண்ட வாகனங்கள் பொலிஸாரின் அதீத பாதுகாப்போடு மன்னார் தீவுக்குள் கொண்டுவரப்பட்ட வண்ணம் இருந்தன.

மக்கள் எதிர்ப்பை பொலிஸ் பாதுகாப்புடன் முறியடிக்கும் ஆட்சித் தரப்பின் போக்கினால் வெகுண்டெழுந்துள்ள போராட்டக் குழுவினர் நேற்று நள்ளிரவு சமயத்தில் அதிரடி நடவடிக்கையில் இறங்கி இருக்கின்றனர்.

மன்னார்த் தீவுக்குள் இத்தகைய காற்றாலை உபகரண வாகனங்களை செல்ல விடாமல் தடுத்து வழிமறிப்பது என்ற அவர்களின் இந்தத் திட்டம் பெரும்பாலும் நள்ளிரவு நேரத்தில் 06






# தண்டவாளத்தில் நின்று தொலைபேசி பேசிய இளைஞன் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு!

## மட்டக்களப்பு கொக்குவிலில் ஞாயிறு இரவு சம்பவம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேசத்தில் ரயில் தண்டவாளத்தில் நின்று கைதொலை பேசியில் உரையாடிக் கொண்டிருந்தவர் ரயில் மோதியதில் உயிரிழந்தார்.

23 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இவ்வாறு உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த 23 வயதுடைய நாகேந்திரன் கரிகரராஜ் என்பவரே இவ்வாறு ரயிலால் மோதுண்டு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த நபர் மனைவியுடன் ஏற்பட்ட சண்டையை அடுத்து நேற்று முன்தினம் இரவு தண்டவாளத்தில் நின்று கொண்டு மனைவியுடன் தொலைபேசியில் சச்சரவுப் பட்டுக் கொண்டிருந்த நிலையில் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அவரின் சடலத்தை மீட்டு ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு ரயில் கொழும்பு நோக்கிச் சென்றது.

இது தொடர்பாக ஏறாவூர் மற்றும் கொக்குவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இணையக் குற்ற முகாம்களுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்கள்



தென்கிழக்கு ஆசியாவில் உள்ள இணையக் குற்ற முகாம்களுக்கு 11 இலங்கையர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில் குறித்த 11 இலங்கையர்களும் இவ்வாறு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

# கூட்டுப்பொறுப்பை பராமரிக்க அமைச்சரவை தவறியுள்ளது

## தலதா அத்துகோரல தெரிவிப்பு



சுப்ரீம்செட் திட்டத்தின் முதலீடு குறித்து மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டதன் மூலம் அமைச்சரவை தமது கூட்டுப் பொறுப்பை பராமரிக்கத் தவறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு நேற்று அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பின் உறுப்புரை 43(1) இன் படி அமைச்சரவை, கூட்டுப் பொறுப்பை பராமரிக்கக் கடமைப் பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில ளிக்கும் விதமாக பிரதமர் ஹறிணி அமரசூரிய ஒரு பதிலை வழங்கியதை அவதானிக்க முடிந்தது.

இருப்பினும், அமைச்சர் வசந்த சமரசிங்க பின்னர் முற்றிலும் மாறுபட்ட தொரு கருத்தை வெளியிட்டார்.

இந்த விடயத்தில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு மீறப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

# வடக்கு – கிழக்கு முழுவதும் வெள்ளிக்கிழமை ஹர்த்தால்

## மட்டக்களப்பில் நாளை கவனவீர்ப்பு
## சாணக்கியன் எம்.பி. நேற்று அறிவிப்பு

**(வாலகிருஸ்ணா)**

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை தமிழரசுக்கட்சியினால் முன்னெடுக்கப்படும் ஹர்த்தால் போராட்டத்திற்கு வடகிழக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்பதுடன் எதிர்வரும் புதன்கிழமை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்தார்.

கபில்ராஜ்ஜுக்கு நடந்த இந்த சம்பவம் நாளை சாணக்கியனுக்கும் நடைபெறலாம். இந்த மாவட்டத்தில் இருக்கும் எவருக்கும் நடக்கலாம். வடக்கு, கிழக்கில் இருக்கின்ற எந்த தமிழருக்கும் நடக்கலாம். இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் அலட்சியமாக இருப்போமானால், இது எதிர்வரும் காலங்களில் எங்களுடைய ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் தொடர்ந்தும் இராணுவ கெடுபிடியை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்ற செய்தியை சொல்லுகின்ற விடயமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்–

ஒரு சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சில இளைஞர்கள் 66–ஆம் பிரிவு ராணுவ முகாமுக்குள் சென்றனர் எனவும் அந்த இடத்தில் அவர்கள் கடுமையாக தாக்கப்பட்டனர் எனவும் செய்தி வெளியாகியது.

சர்வதேச சமூகமும், அதே போன்று வெளிநாட்டு தூதுவர்கள் அனைவரும் இதை ஓர் அவசரமான ஒரு விடயமாகப் பார்க்க வேண்டும் என்பதனை அறிவித்திருந்தோம். அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு குளத்தில் இருந்து அவர்களில் ஒரு இளைஞருடைய சடலம் மீட்கப்பட்டது.

இது ஓர் அபாயகரமான நிலை. இராணுவத்தினால் தமிழ் இளைஞர்களை அடித்து கொலை செய்யும் நிலை 2025 ஆம் ஆண்டிலும் இருக்கின்றமை ஒரு பாரதூரமான ஒரு விடயம். நாங்கள் இந்த பாரதூரமான விடயத்தோடு சேர்த்து இன்னும் பல விடயங்கள் இருக்கின்றது.

ஆனால் மிக முக்கியமாக இந்த பாரதூரமான விடயத்தை கண்டித்து, இது சம்பந்தமாக உலக நாடுகளுக்கு இதனைக் கொண்டு செல்லும் முகமாக, எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒரு ஹர்த்தால் போராட்டத்திற்கு இலங்கை தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்திருக்கின்றது.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை




யன்று இந்த ஹர்த்தால் போராட்டத்தை வடக்கு, கிழக்கு முழுவதும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதற்கான அழைப்பை நாங்கள் விடுத்திருக்கின்றோம்.

இந்த விடயம் சம்பந்தமாக எங்களுடைய முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடாக அறியக்கூடிய தகவல்கள் இருந்தன. எதிர்மனசிங்கம் கபில்ராஜ் (32 வயது) என்ற குடும்பஸ்தர் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இவர்கள் இராணுவ முகாமில் தாக்கப்பட்டனர் என அந்தப் பிரதேச மக்கள் எங்களுக்குக் கூறியிருக்கின்றார்கள். இதிலே பல்வேறு செய்திகள் வருகின்றன. அவர்கள் அந்த இடத்திற்கு ஏன் சென்றார்கள், எதற்கு சென்றார்கள் என்றெல்லாம் நாங்கள் இவற்றை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. இதிக் அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் ஒரு தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு சடலமாக ஒரு குளத்தில் அவர் மீட்கப்பட்டிருக்கின்றார். இதுதான் இதனுடைய முக்கியமான விடயம்.

தமிழர்களை 2025 ஆம் ஆண்டிலும் கூட இராணுவம் அடித்துக் கொல்லுகின்ற அளவிற்கு இருக்கின்றது என்றால் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு எந்த அளவு தூரம் பாதுகாப்பு இருக்கின்றது என்பதை பற்றி மீண்டும் நாங்கள் கேள்விகளை எழுப்ப வேண்டும். இது ஒரு சாதாரண விடயமாக சிலர் கடந்து போகலாம். ஆனால் இது ஒரு சாதாரணமான விடயம் அல்ல. இதை போன்று இராணுவ முகாம்கள் வடக்கு கிழக்கு எங்கும் இருக்கின்றன. இதுபோன்று ஒரு சம்பவம் தென்னிலங்கையில் எங்கேயாவது இடம் பெற்று இருக்கின்றதா? தென் இலங்கையில் நடந்திருந்தால் இன்று அந்தப் பிரதேசங்கள் எல்லாம் பெரிய அளவில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கும். ஏனென்றால் சிங்கள மக்களை சிங்கள ராணுவம் அடித்து கொன்றால் அவ்வாறு ஏற்படும். ஆனால் ஒரு தமிழ் இளைஞரை சிங்கள ராணுவம் அடித்து கொலை செய்யும் போது இந்த விடயத்தை பார்த்து ஒட்டுமொத்த தமிழ் இனமும் மௌனமாக இருக்காமல் நாங்கள் எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு இது நடந்துள்ளது. இதில் – குறிப்பாக வடமாகாணத்தில் – வன்னி மாவட்டத்தில் – இருக்கின்ற மக்களும் சேர்ந்துதான் இந்த அரசாங்கத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை கடந்த பொதுத் தேர்தலில் உருவாக்கினார்கள். இந்த அரசாங்கம் வந்ததன் பிற்பாடுதான் இந்த சம்பவம் நடைபெற்று இருக்கின்றது. இதில் சிலர், "இல்லை.கடந்த அரசாங்கங்கள் போல் இல்லாமல் ராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்" என்று கூறலாம். ஆனால் கைது செய்யப்பட்டனர் என்பதற்காக அந்த இழந்த உயிரை நாம் மீண்டும் பெற முடியாது. அந்தப் பிள்ளைக்கு தன்னுடைய தந்தை திருப்பி கிடைக்க மாட்டார். அந்த மனைவிக்கு தன்னுடைய கணவர் மீண்டும் கிடைக்க மாட்டார்.

இன்று கபில்ராஜ்ஜுக்கு நடந்த இந்த சம்பவம் நாளை சாணக்கியனுக்கும் நடைபெறலாம். இந்த மாவட்டத்தில் இருக்கும் எவருக்கும் நடக்கலாம். வடக்கு கிழக்கில் இருக்கின்ற எந்தத் தமிழருக்கும் நடக்கலாம். இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் அலட்சியமாக இருப்போமானால் இது எதிர்வரும் காலங்களில் எங்களுடைய ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் தொடர்ந்தும் ராணுவ கெடுபிடியை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்ற செய்தியை சொல்லுகின்ற விடயமாக இருக்கும்.

அந்த வகையிலே தான் தமிழ் மக்களுடைய பிரதானமான கட்சி – வடக்கு, கிழக்கில் இருக்கின்ற பிரதானமான கட்சி என்ற அடிப்படையில் – இந்தப் பொறுப்பை தமிழ் மக்களுடைய சார்பிலே இலங்கை தமிழரசு கட்சியை முன்னெடுக்கின்றது. இந்தப் போராட்டத்திற்கான அழைப்பை இலங்கைத் தமிழரசு கட்சியே விடுத்திருக்கின்றது. ஏன் என்றால் இத்தகைய அழைப்புகளை விடுவதற்கான அந்த அங்கீகாரம் தமிழ் மக்கள் எங்களுக்குத்தான் தந்திருக்கின்றார்கள்.

தொடர்ச்சி▼

# வடக்கு - கிழக்கு முழுவதும் வெள்ளிக்கிழமை ஹர்த்தால்

## மட்டக்களப்பில் நாளை கவனவீர்ப்பு
## சாணக்கியன் எம்.பி. நேற்று அறிவிப்பு

தொடர்ச்சி▲

இந்த நேரத்தில் தமிழ் மக்கள் சார்பிலே, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் மௌனமாக இருக்க முடியாது. அதற்காகத்தான் இந்த ஹர்த்தால் அழைப்பை விடுத்திருக்கின்றோம்.

இதேபோன்று எத்தனையோ பிரச்சினைகள் காணப்படுகின்றன. பலர் பேசுகின்றார்கள். 2025 ஆம் ஆண்டு தொழில்நுட்பம் இந்தளவு வளர்ந்த காலகட்டத்திலும் அனைவரிடமும் சமூக வலைத்தளங்கள் இருக்கின்றன. இவ்வாறான காலப்பகுதியில் பயம் இல்லாமல், தாங்கள் தப்பி விடலாம் என்கின்ற நம்பிக்கையுடன் இராணுவத்தினர் ஒரு தமிழ் இளைஞரை அடித்து கொலை செய்வதற்கு துணிச்சலாக இருக்கின்றார்கள். இன்று நிலைமை அப்படியாயின், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எவருமே இல்லாமல் - சர்வதேச மேற்பார்வையும் இல்லை, உள்நாட்டுக்குள்ளேயே வெளி மாவட்டத்தினர் செல்ல முடியாது இணைய வசதி இல்லை, தொலைபேசி வசதி இல்லை, இவ்வாறான காலகட்டத்தில் எத்தனையோ அநியாயங்களைச் செய்திருப்பார்கள்.

இதில் செம்மணி போன்ற எத்தனையோ புதைகுழிகள் சம்பந்தமான அகழ்வு பணிகள் முன்னெடுக்கின்றார்கள். ஆனால் இந்த அகழ்வு பணிகளைப் பற்றி இதுவரைக்கும் சர்வதேசத்தினுடைய உதவி தொழில்நுட்ப ரீதியான உதவியினை இந்த அரசாங்கம் பெற்றுக்கொள்ள தவறியுள்ளது.

இன்று இந்த இளைஞருக்கு நடந்திருக்கின்றது. இனிமேல் இராணுவமும் ஒரு தமிழ் இளைஞர் மீது கை வைக்க முதல் அல்லது ஒரு ராணுவமும் தமிழ் இளைஞர் மீது கை வைத்தால் போராட்டங்கள் வெடிக்கும் என்பதனை தெரிந்து இருக்க வேண்டும்.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும் இதுவரைக்கும் எதுவித மான முன்னேற்றகரமான செயற்பாடுகளும் இல்லை.

இந்த விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் எதிர்வரும் புதன்கிழமை காலையிலும் நடவடிக்கை எடுக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலா அன்று வருகை தருகின்றார். காலையில் 9:30 மணிக்கு கச்சேரியில் கூட்டம் இருக்கின்றது. காலையில் 8:30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் காந்தி பூங்காவில் நாங்கள் ஒரு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நாங்கள் செய்ய போகின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தின் இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் இந்தக் கவனிவீர்ப்புப் போராட்டத்தைச் செய்கிறோம்.

ஆனால் முக்கியமாக வெள்ளிக்கிழமை அன்று 15 ஆம் திக்தி எல்லா மக்களும் ஹர்த்தாலிற்கான பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக ஒரு அணியாக நின்று இந்த ராணுவத்தினுடைய அராஜகத்திற்கு எதிராக நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டும். இது இந்த ஒரு சம்பவத்தை மாத்திரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. இது ராணுவம் வடக்கு, கிழக்கில் அதிகளவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது. 11 நபர்களுக்கு ஒரு ராணுவச் சிப்பாய் இருப்பதாக கடந்த காலத்தில் பேசப்பட்டது. அந்த அளவிற்கு இராணுவத்தை அங்கு வைத்திருக்கின்றனர்.

தொடர்ச்சியாக பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைக் கூட்டத்திற்கு நான் சென்றால் அடுத்த மாதம் அடுத்த மாதம் என்று முறக்கொட்டாஞ்சேனை, பாலையடிவெட்டை, காயங்கனி குருக்கள்மடம் இந்த நான்கு ராணுவ முகாம்களை அகற்றுவது பற்றி ஒவ்வொரு கூட்டமும் அடுத்த மாதம் என்று கூறுகிறார்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

நாங்கள் எப்போதும் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடும்போது அத்தியாவசியமான சேவைகளுக்கு ஒருபோதும் தடையாக இருப்பவர்கள் அல்லர். அத்தியாவசியமான சேவைகள் நிச்சயமாக நடைபெற வேண்டும்.

இதில் வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புகள் அனைவருக்கும் சொல்லும் அறிவித்தல் என்ன என்றால் இன்று இன்னொருவருக்கு ஒரு பிரச்சினை நடக்கும் போது நாங்கள் பார்வையாளராக இருந்து அதற்கு ஆதரவு கொடுக்காவிட்டால் நாளைய தினம் எங்களுக்கு அது நடக்கும்போது அவர்களும் பார்வையாளர்களாக இருப்பார்கள்.

நாங்கள் ஒன்றாக சேர வேண்டும். நாங்கள் ஒன்றாக சேர்ந்து இந்த ஹர்த்தாலை நாங்கள் சரியான முறையிலே நடைமுறைப்படுத்தினால் தான் எங்களுடைய பலத்தை நாங்கள் காட்ட முடியும்.

சகோதர இஸ்லாமிய மக்களது ஜனாஸா எரிப்பு நடந்தபோது அந்த மக்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் மௌனமாக இருந்த போது அந்த மக்களுக்காக நாங்கள்-தான் வீதியில் இறங்கி போராடினோம். அதேபோன்றுதான் நாங்கள் இரு சமூகங்களும் எல்லா மக்களும் இன்னொருவருக்கு நடக்கும் போது நாங்கள் மௌனமாக இருந்தால் நாளை இன்னொரு சமூகத்தினுடைய அல்லது உங்களுக்கு ஒரு விடயம் நடக்கின்ற போது இன்னொருவரும் மௌனமாக இருப்பார்கள். அந்த வகையில் இந்த போராட்டத்திற்கான பூரணமான ஆதரவினை வடக்கு கிழக்கு வாழும் அனைத்து தமிழ் உறவுகளும் வழங்க வேண்டும் என்பதனை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அனைவரும் ஒன்றாக சேர்ந்து அரசுக்கு எதிராக - இந்தச் சம்பவத்துக்கு எதிராக - ஒரு போராட்டத்தை நடத்த யோசிக்கும்போது உள் கட்சி மற்றும் கட்சிகளுக்கு இடையிலான இருக்கின்ற முரண்பாடுகளை தள்ளி வைத்து நாங்கள் இந்த போராட்டத்தை ஒரு வெற்றிகரமாக முடிக்க வேண்டும். - என்றார்.

# தீக் காயங்களுக்கு உள்ளான வயோதிப் பெண் உயிரிழப்பு

தேநீர் தயாரிப்பதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பை பற்ற முற்பட்டபோது உடலில் தீ பற்றியதில் தீக் காயங்களுக்கு உள்ளான வயோதிப பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் டச்சுவீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சாரங்கதரன் துளசிமலர் (வயது 75) என்பவராவார்.

மேற்படி பெண்மணி கடந்த செவ்வாய்க்கிழமை தேநீர் தயாரிப்பதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டிய போது தீ பற்றிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று திங்கள் கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியாசாலை



திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.




# யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் “யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 2025“ ஆனது ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை 3 தினங்கள் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் ஒழுங்கமைக்கப்பட உள்ளது.

புத்தக திருவிழா தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்ற அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற போதே ஏற்பாட்டாளர்கள் இதனைத் தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில் –

புத்தக திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மிகவும் நேர்த்தியான முறையில் இடம்பெற்று வருகின்றன.

நாம் நமது உடலுக்கு உடற்பயிற்சி செய்வது போல வாசிப்பு என்பது நம் மனதுக்கும்புத்திக்கும்ஒரு புத்துணர்ச்சிஅளிக்கக்கூடியது. அதிவேகமாக வளர்ந்து வரும் இந்தத் தொழில்நுட்ப உலகில் நமது சமூகத்தில் வாசிப்புக் கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவையும் சமூகப் பொறுப்பும் நமக்கு உள்ளது.

அந்த வகையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாசிப்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான புத்தகங்களை விலைக்கழிவுகளுடன் அவர்களின் கைகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

இதனை கருத்தில் கொண்டு வருடம்தோறும் புத்தகத் திருவிழா ஒன்றை நடாத்த வேண்டும் எனும் முயற்சியின் முதல் படியாக கடந்த வருடம் யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 2024 இனை சிறப்பாக நடாத்தி இருந்தோம். அனைத்துத் தரப்பினரதும் பெரும் வரவேற்பை பெற்று சிறப்பான புத்தக திருவிழாவாக அது அமைந்தமையானது இவ்வருடம் மேலும் சிறப்பாக இரண்டாவது யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழாவினை ஒழுங்கமைக்க எம்மை ஆர்வப்படுத்தியது. குறிப்பாக இப் புத்தக திருவிழாவானது இலாபநோக்கமற்ற முறையில் நடாத்தப்பட உள்ளது.

உள்நாட்டிலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

பொதுமக்கள், வாசகர்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் ஆகிய நீங்கள் ஒவ்வொருவரும் “யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா 2025” இற்கு வருகை தருவதன் மூலம் பல்தரப்பட்ட பன்மொழி பதிப்பகங்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒரே இடத்தில் சந்திப்பதற்கும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் மட்டுமன்றி, பிரபல எழுத்தாளர்களை சந்தித்துக் கலந்துரையாடவும் புத்தக வெளியீடுகளில் பங்குபெறல் மற்றும் நாடக அரங்குகளை கண்டு மகிழ்வதற்கான ஒரு அரிய சந்தர்ப்பமாகவும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை புத்தக திருவிழாவை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரனும் கலந்து கொள்கிறார்.

மூன்று தினங்களும் புத்தக கண்காட்சியை தாண்டி பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன – என்றனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம் அடைந்தவர் உயிரிழப்பு



மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அல்லரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த வெற்றிவேலு கந்தையா (வயது 77) என்பவராவார்.

மேற்படி வயோதிபர் சைக்கிளில் அரிசி ஆலை ஒன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பி கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மயக்கம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று திங்கள் கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நகரும் இந்த வாகனங்களுக்கு எதிராக இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று நள்ளிரவில் முடக்கப்பட்ட வாகனம் அதனால் தரித்து நிற்கின்றது. இது விடயத்தில் மக்களுக்கு எதிராகப் பலப்பிரயோகத்தை தாங்களாகப் பாவிக்காமல், நீதிமன்றம் மூலம் உத்தரவு எடுத்து, அதனை நடைமுறைப் படுத்துவதற்குப் பொலிஸார் தீர்மானித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

அதாவது பந்தை ஆட்சியாளர்களும் பொலிஸாரும் நீதிமன்றத்தின் களத்துக்குள் தட்டி விட முயல்கிறார்கள். காற்றாலை உதிரிப்பாக வாகனத்தை வழிமறிப்போரை நீதிமன்றம் மூலம் கையாள அவர்கள் விரும்புகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் விவகாரம் இரண்டு வழிகளாலும் நீதிமன்றத்தின் வாசலுக்குத்தான் வந்திருக்கின்றது.

மன்னார்த் தீவுக்கான நுழைவாயில் மன்னார் நீதிமன்ற மூன்றிலில் தான் இருக்கின்றது. அங்குதான் இப்போது வாகனம் வழிமறிக்கப்பட்டு இருக்கின்றது. நீதிமன்ற வாசலை ஒட்டி நிற்கும் விடயத்தை நீதிமன்றத்துக்குள் எடுத்துச் சென்று அந்த உத்தரவோடு, அடுத்த கட்ட நகர்வை முன்னெடுக்கப் பொலிஸார் விரும்புகின்றனர் என்று தெரிகிறது.

வாகனத்தை வல்வந்தமாக மன்னார்த் தீவுப் பகுதிக்குள் கொண்டு செல்வதற்கான உத்தரவை அல்லது வாகனத்தைத் தடுப்போரை பொலிஸார் உரிய முறையில் கையாள்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்குமா என்பதுதான் கேள்வி.

இன்று காலை மன்னார் நீதிமன்றம் கூடும்போது இந்த விடயம் பொலிஸாரினால் மன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கை தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

\+ + +

முத்தையன்கட்டில் இளைஞர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவரும் செயலாளரும் முன்னின்று விடுத்துள்ள ஹர்த்தால் அறிவிப்பை தமிழரசுக் கட்சியின் முன்னெடுப்பாக அல்லாமல், அதனை சுமந்திரனின் முன்னெடுப்பாக கருதி, அதற்காக அதனை முறியடிக்கும் சின்னத்தனமான கைங்கரியத்தில் சில தரப்புக்கள் முனைப்பாக இறங்கி இருக்கின்றன என்று தெரிகின்றது.

இது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை விவகாரத்தையும் பிரதானமாக ஆராயும் தனது 60ஆவது அமர்வுக்காக கூடவிருக்கும் காலம்.

வழமை போல எழுத்தில் நீளப் பட்டோலை சமர்ப்பிப்பதில் அரசியல் நடத்தும் தரப்புகள், இந்தச் சமயத்தில் கிடைத்திருக்கும் ஒரு போராட்ட வாய்ப்பை ஜெனிவாவுக்கும் பொருத்தமானதாக மாற்றும் தமிழரசின் வழிகாட்டலை, தமது தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக – இலக்குகளுக்காக – மடை மாற்ற முயல்வது சுத்தப் போக்கிலித்தனமாகும்.

இளைஞர் கொல்லப்பட்ட சம்பவம் நடைபெற்று இருப்பது முல்லைதீவில். அங்குதான் இலங்கையின் இராணுவப் பிரசன்னம் – குவிப்பு – விகிதாசார ரீதியில் உச்சமாக இருக்கின்றது. அத்தகைய இராணுவப் பிரசன்னத்திற்கு எதிராக மக்களின் உணர்வெழுச்சிப் போராட்டம் – கருத்து நிலைப்பாடு – கொதி நிலையில் இருக்கின்றது என்பதை ஒன்றாக நின்று எடுத்துக்காட்டுச் செய்வதை விடுத்து, அந்த முயற்சியை மலினப்படுத்தும் சின்னத்தனமான அரசியலில் இந்தத் தரப்புகள் இறங்கி இருக்கின்றன.

ஜெனிவா அமர்வு நடைபெறும் சமயத்தில் படை ஆக்கிரமிப்பு – பிரசன்னம் – குவிப்பு – ஆகியவற்றுக்கு எதிராக

# ‘நீதியின் ஓலம்’ கையெழுத்துப் போராட்டம் செம்மணியில் வரும் 23 ஆம் திகதி ஆரம்பம்



தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி தாயகச் செயலணி அமைப்பின் ஏற்பாட்டில், “நீதியின் ஓலம்” எனும் தொனிப் பொருளில் கையெழுத்துப் போராட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணியில் ஆரம்பமாகும் இந்தப் போராட்டம், தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் தமிழர் தாயகத்தின் அனைத்துமாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தாயகச் செயலணி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தமிழர் தாயகம் ஒன்றுபட்டு உணர்வை வெளிப்படுத்தி, அரசு தலைவரையும் நெருக்கடிக்குள் தள்ளும் ஒரு சூழல் கிட்டி இருக்கிறது.

இதனை நன்கு புரிந்து கொண்டுதான், தமிழ்ப் பேசும் ஏனைய சிறுபான்மை இனங்களின் தலைவர்கள் முந்திக் கொண்டு இந்த ஹர்த்தால் போராட்டத்திற்கு தங்கள் ஆதரவை வெளிப்படையாக – பகிரங்கமாக – தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் நமது இனத்துக்குள் இருக்கும் அரசியல் புல்லுருவிகள் இந்தப் போராட்டம் மூலம், அதனை முதலில் அறிவித்த சுமந்திரனுக்கு எங்கே அரசியலில் லாபம் கிட்டி விடுமோ என்ற நரித்தனக் கவலையில் அந்த ஹரத்தால் போராட்டத்திற்கு எதிராக விவகாரங்களைக் கிளப்பி வருகின்றன.

இந்த ஹர்த்தால் எதிர்ப்பை ஒரே குரலில் வெளிப்படுத்தி, மக்களின் கருத்து நிலைப்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறிய பாணியில் இலங்கையில் அரசு தலைவருக்கும் சர்வதேச தரப்புகளுக்கும் உரப்பாக – உறைப்பாக – உணர்த்துவது தமிழ் மக்களின் பொறுப்பாகும்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி வாகனத்தின் நகர்வை மக்கள் முடக்கி, அதனைத் தடுத்து வைத்திருக்கின்றமையை அடுத்து, இன்று அதிகாலையில் அந்தப் பகுதியில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச சூழ்நிலை காணப்பட்டது.

காற்றாலை திட்டத்துக்கு எதிராக மக்கள் நடத்தி வரும் போராட்டம் இன்று பத்தாவது நாளை எட்டும் நிலையில் நேற்று நள்ளிரவு காற்றாலை உபகரணங்களை ஏற்றி வந்த பாரிய வாகனத்தை மன்னார் தீவுக்கு நுழையும் வாசலான மன்னார் நீதிமன்ற மூன்றலில் மக்கள் வழிமறித்துத் தடுத்தனர்.

நேற்று பின்னிரவில் தொடங்கிய இந்த வழிமறிப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு திரண்டு இருந்தனர்.

அந்தப் பாரிய வாகனத்தை மன்னார் தீவுக்குள் கொண்டு செல்வதற்கான பலவந்தமானநடவடிக்கைகளைப்பொலிஸார் எடுக்க முற்பட்டால் – வழிமறிப்புப் போராட்டம் நடத்துவோர் மீது அதற்காகப் பலப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டால் – அந்தப் பகுதியில் எந்நேரமும் பெரும் களேபரம் வெடிக்கும் என்ற நிலைமை நிலவுகின்றது.

இன்று அதிகாலை இரண்டு, மூன்று மணி வரை இந்தப் பதற்ற நிலை நீடித்த வண்ணம் இருக்கின்றது.

அந்தப் பகுதியில் திரண்டுள்ள மக்கள் அந்த உதிரிப்பாக வாகனத்தைத் திருப்பிக்கொண்டுபோகும்படிவிடாது கூச்சலிட்டு வருகின்றனர். அதேவேளையில் ஏனைய வாகனங்கள் அந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பயணிக்கப் போராட்டம் நடத்தும் மக்கள் அனுமதித்தும் வருகின்றார்கள்.

கடந்த ஒன்பது நாள்களாகத் தள்ளாடி சந்தி மற்றும் மன்னார் சுற்றுவட்டப் பகுதியில் தொடர்ச்சியாக மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பாகங்கள் மன்னார் கரப் பகுதிக்குப் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் வாகனங்களில் எடுத்து வரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனையடுத்தே நேற்று நள்ளிரவில் அத்தகைய பாரிய உதிரிப்பாக வாகனம் ஒன்றை வழிமறித்து அதிரடி நடவடிக்கையை மக்கள் போராட்டக் குழுவினர் எடுத்திருக்கின்றனர்.

## ஐ.நா. பொதுச்சபையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பொதுச்சபையின் 80ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார விரைவில் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார். இந்தக் கூட்டத் தொடரிலேயே அவர் உரையாற்றவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜின் பிங் உள்ளிட்ட உலகத் தலைவர்களுடனும் அநுர இருதரப்புப் பேச்சில் ஈடுபடவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

## ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதற்குப் பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் அன்றைய தினம் மடுமாதா கோயிலில் விசேட நிகழ்வு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை நல்லூர் கந்தசாமி கோயிலிலும், வேறு பல இந்துக் கோயில்களிலும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

இவற்றை அனுசரித்து, மக்களுக்கான அவசர சேவைகளைப் பேணுவதைப் போல், விதிவிலக்காகப் பக்தர்கள் கோயில்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து சேவைகளையும் பேணுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோருகின்றோம்.

அது தவிர்ந்து, மற்றைய அனைத்து தரப்புக்களையும் இந்தக் ஹர்த்தாலுக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

# ஜனாதிபதி சபையில் பொய்யுரைக்கின்றார்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து பொய் கூறுவதை விடவும், பொலிஸிடம் உண்மைகளை தெரிவிப்பது சிறந்த தீர்மானமாக அமையும் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு சென்று விசேட உரையாற்றிய ஜனாதிபதி, அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கமையவே, முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைதுசெய்யப்பட்டதாக உதயகம்மன்பில கூறுவது முற்றிலும் தவறானது எனவும், நீதிமன்ற உத்தரவுகளுக்கமையவே அவர் கைதுசெய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் இந்த கூற்று முற்றிலும் பொய்யானது எனவும் நிஷாந்த உலுகேதென்னவை கைது செய்ய எந்த நீதிமன்ற உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை எனவும் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

நிஷாந்த உலுகேதென்னவை கைது செய்தது மாத்திரமல்லாது, பிணையில் செல்ல முடியாதபடி, கொலை குற்றச்சாட்டில் அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

எனவே, தமது அரசாங்கம் செய்யும் தவறுகளை மறைப்பதற்கு நீதிமன்றத்தை காரணம் காட்ட வேண்டாம் என ஜனாதிபதியை தாம் எச்சரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் கூறுவது பொய் எனில் அது குறித்து நாடாளுமன்றில் தெரிவிப்பதை காட்டிலும் காவல்துறையிடம் முறைப்பாடளிப்பது சிறந்த செயற்பாடாக அமையும் எனவும் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# சபாநாயகருக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு



சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு புதிய மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்டத் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான தினேஷ் அபேகோனினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் நாடாளுமன்ற ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மையமாக மாற்றப்பட்டுள்ளதாகவும், நிறுவன சட்டக் கோவையின்படி சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை வேறு எந்த நோக்கத்துக்காகவும் பயன்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டால், அமைச்சரவை ஒப்புதல் தேவை என்றும், தற்போது அமைச்சரவை ஒப்புதல் பெறாமல் அதற்காக நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய ஒப்புதலை வழங்க ஆலோசனைக் குழுவுக்கும் அதிகாரம் இல்லை எனவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இது அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தும் நடவடிக்கை என்பதால், இதனை விசாரிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே,ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளால் தீர்வையற்ற வர்த்தக நிலையங்களிலிருந்து சட்டவிரோதமாக மதுபான போத்தல்களை பெற்ற சம்பவம் தொடர்பாக, சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# நேற்று பெய்த மழை காரணமாக பொலிகண்டி பகுதியில் வீடு சேதம்

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை காற்றுடன் மழை கொட்டி தீர்த்ததன் காரணமாக பொலிகண்டி பகுதியில் வீடொன்று பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

நேற்று திங்கள் கிழமை அதிகாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சுமார் இரண்டு மணி நேரமாக கடும் காற்றுடன் கன மழை கொண்டித் தீர்த்தது.

காற்றுடன் மழை கொட்டித் தீர்த்ததன் காரணமாக பொலிகண்டி மேற்கு பகுதியில் குடியேற்ற திட்டத்தில் உள்ள வைரமுத்து பரமானந்த ராஜா என்பவரது வீடு கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

# நாட்டில் 5 மாதங்களில் 32 சிறுமிகள் கர்ப்பம்

நாட்டின் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் பதின்ம வயதைச் சேர்ந்த 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வருடாந்தம் வெளியிடும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான புள்ளிவிபரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 53 சிறுமிகள் கர்ப்பம் தரித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் 32 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்கு முறையான பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.





# கிளிநொச்சியில் பெண்ணொருவர் இனந்தெரியாத நபர்களால் கொலை

கிளிநொச்சியில் பெண் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் நேற்று மாலை படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

விஜயரத்தினம் சரஸ்வதி என்ற 68 வயதுடைய பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேலையற்ற பட்டதாரிகள்

இந்த நாட்டில் உயர் கல்வி பெற்று, பட்டதாரிகளான ஒரு கற்றறிந்த தரப்பினர் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு, தெரிவித்திருக்கும் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா ஆட்சி அதிகாரத்திற்கு வந்து ஏறத்தாழ ஒரு வருடமாகின்றது. ஆனால் வேலையற்ற பட்டதாரிகள் 40 ஆயிரம் பேர் இன்னமும் வேலையின்றி வீதிகளிலே காத்திருக்கின்றார்கள் எனச் சுட்டிக் காட்டி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்.

தேர்தலுக்கு முன்னர் இந்த வேலையற்ற பட்டதாரிகள் குறித்து அதிகம் சிரத்தையும், கவனமும் எடுப்பவர்களாகப் பாசாங்கு காட்டிக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் அவர்களை கைவிட்டு விட்டனர், ஏமாற்றி விட்டனர் என்று எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக் காட்டுவதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

'வளமானநாடு-அழகானவாழ்க்கை' என்று தங்களுடைய தேர்தல் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியினர், வேலையற்ற பட்டதாரிகளின் வேலை வாய்ப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகப் பல விடயங்களை அதில் குறிப்பிட்டு இருந்த போதிலும் அவற்றை எல்லாம் அவர்கள் இப்போது ஆட்சிக்கு வந்ததும் மறந்து விட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டுகின்றார்.

35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் தருவோம், இவர்களில் 20 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் தொழில் தருவோம் என எவ்வாறு வேலை வழங்கப்படும் என்பதும் தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்த கொள்கை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. உள்நாட்டு சுங்கத் திணைக்களம், இறைவரித் திணைக்களம், சுற்றுலாத் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆள்சேர்ப்புகளை செய்வோம் என்றும் விவரித்திருந்தார்கள். ஆனால் எதுவும் இன்னும் நடக்கவேயில்லை என்று இந்த அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தை தோலுரித்துக் காட்டுகின்றார் சஜித்.

“முந்தைய அரசாங்கத்தைப் போலவே, இந்த அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்திற்கு பயந்து, இளைய தலைமுறையினரின் கனவுகளை குழிதோண்டிப் புதைத்து வருகிறது. வேலையற்ற பட்டதாரிகள் என்போர் வெறுமனே அரசியல் கைப்பாவைகள் அல்லர். மாறாக படித்த, அறிவுச்சமூகத்தினர் ஆவர். இவர்கள் நாட்டின் வளங்கள் ஆவர். இவர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுவது ஏற்றுக்கொள்ள முடியாது விடயம்” என்று எதிர்க் கட்சித் தலைவர் விசனிக்கின்றார்.

“இந்தப் பட்டதாரிகளுக்கு முறையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இவர்களை நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தலாம். இருந்தாலும் இவ்வாறான முயற்சிகள் இதுவரை எடுக்கப்படவில்லை. இப்போதாவது இவர்களை தொழிலுக்கமர்த்தி, உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகளை வழங்கி, அத்தியாவசிய துறைகளில் ஈடுபடுத்த வேண்டும்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கும் விடயம் அர்த்தம் நிறைந்தது.

அதனைப் புரிந்து கொண்டு, தன்னைத் திருத்தி, வேலையற்ற பட்டதாரிகள் எனும் தேசிய வளத்தை வீணடிக்காமல் நாட்டின் மேம்பாட்டுக்குரியதாக அதனை மாற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.....!






# குருநாகலில் நேற்று மோசமான விபத்து

(உடப்புச் செய்தியாளர்:க.மகாதேவன்)

குருநாகல் பகுதியில் குருநாகல் – நீர்கொழும்பு பிரதான வீதியில. நேற்றுத் திங்கட்கிழமை காலை எரிபொருள் ஏற்றிய கொள்கலன் ஒன்று சாரதியின் நித்திரைக் கலக்கம் காரணமாக அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் சாரதிக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அருகிலிருந்த கட்டடத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# மன்னார் நகர சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர்கள் வடக்கு ஆளுநருடன் நேற்று சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், மன்னார் நகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட் கிழமை நடைபெற்றது.

மன்னார் நகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அவசரம் தேவை என்றும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மாந்தை மேற்கு பிரதேசசபையின் வருமானத்தை அதிகரிப்பதற்குரிய வேலைத் திட்டங்களுக்கு உதவிகளை வழங்குமாறும் ஆளுநரிடம் கோரப் பட்டது.

இதேவேளை, சோலைவரி மீளாய்வை மேற்கொள்ளுமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டமையுடன், தவிசாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் நிறைவேற்றக் கூடியவற்றை விரைவில் நிறைவேற்றித் தருவார் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், உபதவிசாளர் முஹமட உசைன், மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஞா.பிரேம்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.




**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான**

**மீன்ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல் -2025**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள்ஏலம் கோரப்படவுள்ளன.

- ஏலம் கோரவுள்ள திகதி :- **15.08.2025** முற்பகல் 10.00 மணிக்கு
- ஏலம் கோரப்படவுள்ள இடம் :- நானாவித இறைவரி பகுதி
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் , நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும் .

வி.மதிவதனி
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# வவுனியாவில் தனியார் கல்வி நிலையக் கிணற்றிலிருந்து உயர்தர வகுப்பு மாணவி ஒருவர் நேற்று சடலமாக மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியாவில் தனியார் கல்வி நிலையக் கிணறு ஒன்றில் இருந்து உயர்தர மாணவி ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு காலையில் இருந்து மதியம் 12 மணிவரை வகுப்புகள் நடைபெற்றுள்ளன.

அந்தக் கல்வி நிலையத்தில் உயர்தர வர்த்தகப் பிரிவு - 2025 இல் கல்வி கற்கும் சம்பந்தப்பட்ட மாணவி நீண்ட நேரமாகியும் வீடு வந்து சேராமையால் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மாணவியைத் தேடியுள்ளனர்.

இதன்போது, மாணவியின் புத்த கப்பை, சைக்கிள் என்பன மாணவி கல்வி பயின்ற தனியார் கல்வி நிலையத்தில் காணப்பட்டன. அக்கல்வி நிலைய வளாகத்தில் இருந்த கிணற்றின் அருகே மாணவியின் செருப்பும் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பெற்றோர் மற்றும் கல்வி நிலைய நிர்வாகத்தினர் வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், மாநகர சபையினர், கிராம அலுவர், கிராம மக்கள், மாணவர்கள் எனப் பலரும் இணைந்து 40 அடி ஆழமான கிணற்றில் தேடுதல் மேற்கொண்டு மாணவியை சடலமாக நேற்று மாலை மீட்டு எடுத்தனர்.

இந்தச் சம்பவத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி பயிலும் வவுனியா, கோமரசன்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவியின் உடலம் வவுனியா வைத்தியாசலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.







# புத்தளம் வில்பத்து பகுதியில் முறையான அனுமதியின்றி செயற்பட்ட இல்மனைட் கழுவும் பிரதேசம் சுற்றிவளைப்பு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் வில்பத்து தேசிய பூங்காவின் எல்லைக்குட்பட்ட அருவக்காடு உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் பகுதியில் முறையான அனுமதியின்றி இல்மனைட் கழுவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ஓர் இடத்தை வாலனா பிராந்தியத்தின் மத்திய வேலைநிறுத்தப் படை சோதனை செய்ததில், ரூ.200 மில்லியனுக்கும் அதிக் மதிப்புள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கைப்பற்றபட்டுள்ளன.

செயல்பாட்டு காவல் ஆய்வாளர் பிரியந்த விஜேசூரியவின் தலைமையில், மத்திய தாக்குதல் படையின் இயக்குநர், காவல் கண்காணிப்பாளர் கே.ஏ. உதய குமாரவின் மேற்பார்வையின் கீழ், பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக வீரசிங்க, காவல் ஆய்வாளர் ஜனிதா மற்றும் பிற அதிகாரிகளுடன் இணைந்து இச்சோதனை நடத்தப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் போது இந்த இடம் சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் மற்றும் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் பாதுகாப்பின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது சுற்றுச்சூழல் அமைப்பை பாரிய அளவில் அழித்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட இல்மனைட் திட்டத்திற்காக நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமையான களுவாரா, புருதா, வீரா உள்ளிட்ட மரங்களை அழித்து 20 ஏக்கருக்கும் அதிகமான நிலம் கையகப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






இந்த இடத்தில் முதற்கட்ட சுற்றுச்சூழல் மதிப்பீடு (EIA) கூட மேற்கொள்ளப்படவில்லை எனவும், பல அரசு நிறுவனங்களிடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டிருந்தாலும், அவை சட்டப்பூர்வமானவை அல்ல என்பதும் தொடர்புடைய விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை இடம் வில்பத்து தேசிய பூங்காவின் பெரகா மண்டலத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றும், அந்த இடத்திற்கான நீர் வில்பத்து பெரகா மண்டலத்திற்குள் அமைந்துள்ள லுனு ஓயாவிலிருந்து பம்ப் செய்யப்படுகிறது என்றும் தெரியவந்துள்ளது.

இந்த இடம் தொல்பொருள் ரீதியாக உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழலாக இருந்தபோதிலும், தொல்பொருள் துறை தலையிட்டு ஒரு நீர்த்தேக்கத்தை கட்ட அனுமதி வழங்கியுள்ள போதிலும், அகழ்வுக்கு எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை.

இருப்பினும், தொல்பொருள் பரிந்துரைகளைக் கூட கருத்தில் கொள்ளாமல், இந்த இடத்தில் 20 அடிக்கும் அதிகமான ஆழமும் இரண்டு ஏக்கருக்கும் அதிக பரப்புள்ள நிலத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளதுடன், லுனு ஓயாவிலிருந்து பம்ப் செய்யப்பட்ட நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளமை சோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஒருவர்

(பா.சதீசன்)

துணுக்காய் பிரதேச செயலகம் முன்னால் கிருஷ்ணரூபன் என்பவர் நேற்றுப் பகல் முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

நேற்றிரவும் அவர் உணவின்றிப் போராட்டத்தைத் தொடர்ந்தார். சில கோரிக்கைகளை முன்வைத்து அவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

■ துணுக்காய் பிரதேச செயலகம் தனியார் முதலாளிகளிடம் இருந்து இதுவரை இலஞ்சமாகப் பெற்ற அனைத்தையும் மீள கையளிக்க வேண்டும்.

■ பிரதேச செயலக ஆளுகைக்குள்ள மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும்.

■ 2017ம் ஆண்டு வரட்சி நிவாரணம் வழங்கியமை தொடர்பில் அதன் தெரிவு பட்டியல் தொடர்பிலும் அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் நீதியானதும் நியாயமானதுமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

■ காணிப்பிணக்குகளை பாரபட்சமற்ற முறையில் தீர்க்கவேண்டும் மற்றும் காணிகள் வழங்கப்படவேண்டும்.

■ தமது துணைவியார் கிராம அலுவலர் திருமதி கிருஷ்ணரூபன் கலைச்செல்வியின் தண்டனைப் பணியிட மாற்றம் தொடர்பில் வெளிப்படையான விசாரணையும் தீர்வும் வேண்டும்.

– இது போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவரை பிரதேச செயலாளர் பேச அழைத்த போதும் அவர் பேசுவதற்கு மறுப்பு தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை இது தொடர்பில் கருத்துரைத்த பிரதேச செயலாளர் ராமதாஸ் ரமேஸ் –

திரு. கிருஸ்ணரூபன் இன்றையதினம் துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக சில விடயங்களை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் குறிப்பிடுகின்ற விடயங்கள் அனைத்தும் எனது நிர்வாக காலப்பகுதியில் இடம்பெறவில்லை. இது தொடர்பில் அவர் ஏற்கனவே ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், ஆளுநர் அலுவலகம், மாவட்டச் செயலகம் உள்ளிட்ட திணைக்களங்களுக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைத்துள்ளார். இது சம்பந்தமான விசாரணைகளை ஒட்டி கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாக மாவட்ட செயலாளருடைய புலனாய்வுப் பிரிவினரால் அது தொடர்பிலான ஆவணங்கள் எடுத்து செல்லப்பட்டுள்ளன. இது தொடர்பாக மாவட்ட செயலாளரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.






அவர் தனது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் செய்வது அவரின் ஜனநாயக உரிமையாக இருந்தாலும், அது தொடர்பில் விசாரணை முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பதனை நான் கூற முடியாது.

அவர் போராட்டம் நடாத்துகின்ற இடத்துக்கு எமது உதவி பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரை அனுப்பி வைத்து அழைப்பு விடுத்திருந்தேன்.

ஆனால் அவர் கதைப்பதற்கு உடன்பாடில்லை, நான் கதைக்க விருப்பமில்லை எனத் தெரிவித்திருந்தார்

அவரின் கோரிக்கைகள் தொடர்பில் மாவட்ட செயலாளரை அணுகி அவரின் வேண்டுகோளை விரைவுபடுத்த முடியும். மேலும் இது தொடர்பிலான அறிக்கைகளை மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன். – என்று தெரிவித்தார்.

வடக்கு ஆளுநர் நேரில் வந்து நியாயமான தீர்வுக்கு உறுதி தரவேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர் கோருகின்றார் என ஒரு தகவல் தெரிவித்தது.



# மன்னார் காற்றாலைத் திட்டத்தை நிறுத்துக! வவுனியாவில் மனிதச்சங்கிலிப் போராட்டம்

(கி.வசந்தன்)

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலைத் திட்டத்தை நிறுத்தக் கோரியும், இல்மனைற் அகழ்விற்கு எதிராகவும் மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதச் சங்கிலொ போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்திற்கு அண்மையில் நேற்று இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள் –

அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்த வேண்டும். இலங்கையின் மீன்பிடி தொழில் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கைக் காற்றின் வலு முதலானவற்றிற்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

இந்தநிலையில் ஏகபோக இராட்சத பல்தேசிய கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத நிலையாலும் அழிவை எதிர் நோக்கி உள்ளது மன்னார்த் தீவு.

ஏற்கனவே உள்ள காற்றாலைகளால் மீன் கரைக்கு வருவது குறைந்துவிட்டது.



மீன் இனப்பெருக்கம் குன்றிவிட்டது. காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள் வடிகாலமைப்பை மாற்றி வெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தடி நீர் உவராதலை ஏற்படுத்தியுள்ளன.

காற்றாலைகளின் இரைச்சல் மன்னாருக்கு வரும் வலசைப் பறவைகளின் வருகையை தடுக்கவும் பாதையை மாற்றவும் அவை காற்றாடிகளால் இறக்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளது. இது மட்டுமின்றி மக்களின் வாழ்விலும் காற்றாலைகளின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட், தோரியம் போன்ற கனிமவளங்கள் இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவ தேவைகளுக்காக உலகநாடுகளுக்கு தேவைப்படுகின்றன. அதில் முதலீடு செய்வது பெரும் லாபம் தரும் என்பதால் பல் தேசிய நிறுவனங்கள் முண்டியடிக்கின்றன.

எனவே மன்னாரில் நடைபெற இருக்கின்ற இந்த அகழ்வு மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்துவிடும் அளவிற்கு ஆபத்தானது. இந்தக் காற்றாலை மற்றும் கனிய அகழ்வு நாட்டின் தேவைக்கானதல்ல, பல் தேசிய கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். – என்று தெரிவித்தனர்.

வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இப்போராட்டத்தில், அரசியல் தரப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# தேர்தல்கள் ஆணையம் நோக்கி பேரணி; ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் கைது

வாக்காளர் பட்டியல் முறைகேடு குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தியும், பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டில்லியில் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நோக்கி பேரணியாக சென்ற இண்டியா கூட்டணி எம்.பிக்கள் டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் உள்ள மகர் துவாரிலிருந்து நிர்வாச்சன் சதனில் உள்ள தலைமை தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குப் பேரணியாக சென்றனர்.

இப்பேரணியில் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணமுல் எம்.பி மஹுவா மொய்த்ரா உள்ளிட்ட இண்டியா கூட்டணி




கட்சியினர் கலந்துகொண்டனர். அவர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து செல்லும்போது, பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் தடுப்புகளை அமைத்துள்ளதால், இண்டியா கூட்டணி மூத்த தலைவர்களான காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் மற்றும் என்.சி.பி. தலைவர் சரத் பவார் உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தை தொடர்கின்றனர். நேற்று நடந்த பேரணியின் போது திரிணமுல் எம்.பி மிதாலி பாக் மயக்கமடைந்தார்.

பேரணியின் போது பேசிய காங்கிரஸ் எம்.பி ஜெய்ராம் ரமேஷ், "தேர்தல் ஆணையத்திடம் எங்கள் கோரிக்கையை மிகவும் தெளிவாக முன்வைக்கிறோம். நாங்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தலைமை தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு அமைதியான பேரணியை நடத்தி வருகிறோம். பிஹார் சிறப்பு தீவிர திருத்தம் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் ஒரு குறிப்பாணையை வழங்க விரும்புகிறோம். இப்போது தேர்தல் ஆணைய அலுவலகத்துக்கு செல்வதற்கு கூட எங்களுக்கு அனுமதி இல்லை. நாடாளுமன்ற வளாகத்திற்கு முன்னால், ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகிறது." என்று கூறினார்.

# நக்சலலைட்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 3,000 வீடுகள்

நக்சலலைட்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 3,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

சத்தீஸ்கரில் நக்சலைட்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதியில் கிராம மக்கள் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் நக்சலைட்களால் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா சிறப்பு திட்டத்தின் கீழ் 3,000 வீடுகள் கட்டும் பணியை மாநில அரசு தொடங்கி



உள்ளது.

இதுகுறித்து அரசு அதிகாரிகள் தெரிவிக்கையில்,

"நக்சல்களின் வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு 3,000 வீடுகள் கட்டும் பணி தொடங்கி விட்டது. பயனாளிகளில் சரணடைந்த நக்சலைட்களும் அடங்குவர். ஏனெனில், வழக்கமான பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் அவர்கள் பயனடைய முடியாது. எனவே, சிறப்பு திட்டத்தின் கீழ் அவர்களின் மறுவாழ்வுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. " என்று தெரிவித்துள்ளனர்.

# தூய்மைப் பணியாளர்களுடன் பனையூரில் விஜய் சந்திப்பு

## போராட்டத்துக்கு ஆதரவு

சென்னையில் 11 நாள்களாக போராடி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் ஆதரவு தெரிவித்துள்ளார். தூய்மைப் பணியாளர்கள் குழுவை பனையூரில் அவர் சந்தித்துப் பேசினார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களில் சிலர் நேற்று த.வெ.க. தலைவர் விஜயை சந்தித்தனர். சென்னையை அடுத்த பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அப்போது, தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்தை த.வெ.க. ஆதரிப்பதாக அவர்களிடம் விஜய் கூறினார்.

சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் விஜய்யை சந்தித்தப் பின்னர் தூய்மை பணியாளர்கள் கூறும்போது,

"எங்களுடைய போராட்டம் தொடரும். எங்களை கைது செய்தாலும், சிறையில் அடைத்தாலும் எங்கள் போராட்டம் தொடரும். அரசு வேலையில் இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். கிட்டத்





தட்ட 20 ஆண்டுகள் வேலை செய்த நாங்கள் இந்தப் பணியில் தொடர வேண்டும் என்று நினைக்கிறோம்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆனால், உரிய அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக பணி நீக்கம் செய்துள்ளனர். இதற்கு எதிரான சட்ட போராட்டம் தொடரும். விஜய்யை சந்தித்து எங்கள் கோரிக்கைகளை முன்வைத்தோம். எங்கள் நிலை கவலை தருவதாக விஜய் கூறினார். இது குறித்து ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்தார். சாதாரண குப்பை அள்ளுபவர்களுக்கு சென்னை மாநகராட்சியில் அரசு பணி வேண்டுமா என்கின்ற அடிப்படையில் எங்களை டீல் செய்கிறார்கள் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தோம்." என்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை அரசு நிரந்தரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும், தனியாரிடம் வேலையை ஒப்படைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சென்னை மாநகராட்சியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள ரிப்பன் மாளிகைக்கு வெளியே 11ஆவது நாளாக தூய்மைப் பணியாளர்கள் இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் அமைச்சர் சேகர்பாபு , மேயர் பிரியா, மாநகராட்சி ஆணை யர் குமரகுருபரன் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந் துள்ளது.

இதனால், தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தூய்மைப் பணியாளர்களுக்கு மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி, நா.த.க, அ.தி.மு.க, பா.ம.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், தூய்மைப் பணியாளர்களை பனையூருக்கு அழைத்து விஜய் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுக்கும்

## பிரதமர் அந்தோணி அல்பானீஸ் அறிவிப்பு



பாலஸ்தீன அரசை அவுஸ்திரேலியா அங்கீகரிக்கும் என்று அந் நாட்டுப் பிரதமர் அந்தோணி அல் பானீஸ் அறிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் நேற்று அவுஸ்திரேலியா பிரதமர் அந்தோணி அல்பானீஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் கனடாவின் இதேபோன்ற அறிவிப்புகளுக்குப் பின்னர் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் அண்மைய நடவடிக்கை இதுவாகும்.

இரு நாடுகள் தீர்வு, காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகளை விடுவித்தல் ஆகியவற்றிற்கான சர்வதேச உந்துதலுக்கு பங்களிக்கும் வகையில், எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் அவுஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா பாலஸ்தீன அதிகாரசபையிடமிருந்து பெற்ற உறுதிமொழிகளின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படும் என்றும், இஸ்லாமிய போராளிக் குழுவான ஹமாஸ் எந்த எதிர்கால அரசியல் பங்களிப்பிலும் ஈடுபடக் கூடாது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

மேலும், சர்வதேச சமூகத்தின் அழைப்புகளை நெதன்யாகு புறக் கணித்ததாலும், காசாவில் சட்ட மற்றும் நெறிமுறைக் கடமைகளுக்கு இணங்கத் தவறியதாலும் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் முடிவு மேலும் கட்டாயப்படுத்தப்பட்டது என அவுஸ்திரேலியா பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

# காசாவில் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு ஹமாஸே பொறுப்பு; பெஞ்சமின் நெத்தன்யாகு

காசா பகுதியில் பொதுமக்கள் கொல்லப்படுவது, பாரிய சேதங்கள் இடம்பெறுவது அத்தியாவசிய உதவி பொருள் விநியோகம் பாதிப்படைவது போன்றவற்றிற்கு ஹமாஸே பொறுப் பேற்க வேண்டும் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தம்வசமுள்ள பணியக் கைதிகளை விடுவிப்பதுடன், ஆயுதங் களைக் கைவிடும் பட்சத்தில் காசா வில் நாளையே போர் நிறைவடைந்து விடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலுக்கு உள்ளேயும் வெளியேயும் சர்வதேச அளவில் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

காசாவை ஆக்கிரமிப்பது இஸ்ரேலின் நோக்கமல்ல, அதனை விடுவிப்பதுதான் தமது இலக்கா கவுள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இராணுவமய மாக்கப்படும் காசாவை விடுவித்து இஸ்ரேலின் இராணுவம் பாதுகாப்பை மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டுள்ள நெந்தன்யாகு, இஸ்ரேல் அல்லாத சிவில் நிர்வாகம் காசாவை பொறுப் பேற்கச் செய்வதே தங்கள் இலக்கு எனவும் தெரிவித்துள்ளார்.





# வீதியோரங்களில் வசிப்பவர்களை வெளியேற்ற ட்ரம்ப் நடவடிக்கை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வொசிங்டனில் வீதியோரங்களில் வசிப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் குற்றவாளிகள் என கருதுபவர்களை சிறையில் அடைக்கவும் தீர்மானித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது வொஷிங்டனை முன்னர் இருந்ததை விட பாதுகாப்பானதாகவும் அழகாகவும் மாற்றும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை மிக விரைவில் செயல்படுத்தப்படும் எனவும் வீதியோரங்களில் வசிப்பவர்களுக்கு வேறு இடங்களை வழங்கவுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2025




கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் மகிழ்ச்சியாக உற்சாகமாக செய்யுங்கள். இதனால் நன்மை விளையும்.

இன்று நீங்கள் சிறப்பாகவும் விரைந்தும் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உறவின் அம்சங்களுக்கு மதிப்பு அளிப்பீர்கள். நட்பான உறவு கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். திருப்திகரமாக இருக்கும். நீங்கள் பணம் அதிகம் சேமிப்பதற்கான நிலையும் காணப்படும்.

இன்று நீங்கள் போதிய ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பீர்கள்.




உங்கள் செயல்திறனை மேம்படுத்துங்கள். இன்று வெற்றி கிடைக்கும் நாள். உங்களை முன்னேற்றிக்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி செய்யும் பாணியில் மாற்றங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியோர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமான உறவுக்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மிதமாக இருக்கும். வரவு செலவு இரண்டுக்குமான வாய்ப்பு அதிகம். பணத்தை கவனமாக கையாள்வது சிறந்தது.




இன்று எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

இன்று உறவில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பேசத் தொடங்குமுன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டியது அவசியம்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உணவுக் கட்டுப்பாடு மேற்கொள்வது சிறந்தது. இனிப்பு வகை உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பெரும்பாலும் உங்களுக்கு சாதகமான நாள். இன்று நல்ல நண்பர்கள் மற்றும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உகந்த நாள். பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். தொழிலைப் பொறுத்த வரை நல்ல லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதியும் திருப்தியும் காணப்படும். உங்கள் வீட்டில் விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றலும் உயர்ந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் சளி இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




முயற்சியின் மூலம் வெற்றி கிடைக்கும் நாள். பயணம் மூலம் வெற்றி காண்பதற்கு வாய்ப்புள்ள நாள்.

பணியிடச் சூழல் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். என்றாலும் இன்று பொதுவாக இன்று மகிழ்ச்சி நிலவும் நாள்.

பணம் அதிகமாக காணப்படும். இன்னும் அதிக பணம் தேவைப்பட்டால் வங்கியில் கடன் வாங்கி அதனை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு நோக்கம் நிறைவேறும் வகையில் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நீங்கள் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பணியில் உங்கள் திறமைகளை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காண்பீர்கள். குழந்தைகளின் வளர்ச்சி மனத் திருப்தியை அளிக்கும்.

பங்குகளில் முதலீடு செய்வது லாபகரமாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபம் கிடைக்கும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக உணர்வீர்கள்.




இன்று துடிப்பான நாள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் இன்று நீங்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவீர்கள்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணியில் உங்கள் திறமை பிரகாசிக்கும்.

உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் பணம் காண்பீர்கள். உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்துக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சுய வளர்ச்சிக்கு இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நலனுக்காக இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணியில் சீரான பலன்கள் கிடைக்கும். இன்று பணிகள் எளிதாகவும் சுமூகமாகவும் நடக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அமைதியான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை பொறுத்தவரை சிறப்பான நாள். இன்று நிதிநிலையை சிறப்பாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2025


தனுசு

இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் செயல்களை செய்யுங்கள். ஆனால் உடனடி பலனை எதிர்பார்க்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. நீங்கள் பணியில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சுமூகமாகப் பணிகள் நடக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்துக்குத் தேவையான பிணைப்பு இன்று காணப்படாது. பேசும் போது கவனம் தேவை.

அதிக செலவுகள் காரணமாக இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். சேமிப்பும் குறைவாக இருக்கும். மன உளைச்சல் காரணமாக கால் மற்றும் தொடை களில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.


மகரம்

இன்று சமநிலையான நாள். நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் பராமரிக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழில் செய்பவர்களுக்கு இன்று சிறப்பான நாள். அதிக லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. வேலை புரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

குடும்ப உறவில் அன்பும் நல்லிணக்கமும் காணப்படும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று லாபம் காண்பீர்கள்.இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

சளிப் பிரச்சினை காணப்படும். மற்ற படி உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது வருத்தம் அளிக்கும்.


கும்பம்

முக்கிய முடிவுகளை வேறொரு நாளைக்கு தள்ளிப்போடுவது சிறந்தது. சுப காரியங்கள் நடப்பதும் தாமதம் ஆகும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணியில் பிரகாசிக்க நீங்கள் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

குடும்பத்தில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சேமிப்பு பழக்கத்தை பராமரிப்பது நிதியின் ஸ்திரத்தன்மைக்கு உதவும்.கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.


மீனம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடச் சூழல் சாதகமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது மாறுபட்ட அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் அன்பு மயமான உணர்வும் உற்சாகமும் காணப்படும். உங்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# மரக்கறி விநியோகிக்கும் ஓட்டோவில் கஞ்சாவும் மறைமுகமாக விநியோகம்!

## ஹட்டன் பகுதியில் ஒருவர் சிக்கினார்




(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

பலாங்கொட பகுதியில் இருந்து ஹட்டன் பகுதிக்கு கஞ்சா போதைப் பொருள் கொண்டு வந்த சந்தேக நபர் ஒருவரை ஹட்டன் குற்றவியல் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று.திங்கள்கிழமை காலை 06.30 மணியளவில் இடம் பெற்றதாக ஹட்டன் குற்றவியல் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பலாங்கொட பகுதியில் இருந்து ஹட்டன், பொகவந்தலாவ, நோர்வூட், டிக்கோயா ஆகிய பகுதிகளுக்கு ஓட்டோவில் மரக்கறி வகைகளை விற்பனை செய்பவர்களிடம் இருந்தே இந்த ஒரு தொகை கஞ்சா மீட்கப்பட்டதாகவும், ஓட்டோ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே இந்த கஞ்சா மீட்கப்பட்டதாகவும், இந்த ஓட்டோவில் வருபவர்கள் இந்தப் பகுதிக்கு இந்தப் போதை பொருளான கஞ்சாவையும் விநியோகம் செய்கின்றனர் எனவும் ஹட்டன் குற்றவியல் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிவந்துள்ளது.

இதேவேளை பொலிஸ் மோப்ப நாயினை பயன்படுத்தி சோதனைக்கு உட்படுத்தியமையை அடுத்து, சந்தேக நபர்களால் கொண்டு வரப்பட்ட மேலும் ஒரு தொகை கஞ்சா சில பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டிருக்கலாமெனக் குற்றவியல் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேக நபரை ஓட்டோவுடன் இன்று ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை ஹட்டன் குற்றவியல் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.